மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு கேட்ட அதே கேள்வியைத்தான் மீண்டும் கேட்கிறார்கள். தொடர்ந்து இப்போதுள்ள நேரத்தில் அதிகம் தமிழ் நிகழ்ச்சிக்கு ஒதுக்க வேண்டுமென்று மைய அரசுக்கு மாநில அரசு கடிதம் மூலமும் நேரிடையேயும் வலியுறுத்தி வருகிறது.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொலைக்காட்சியில் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் தங்களது தொகுதிக்கு ஆற்றியுள்ள பணிகளைத் தெரிவிக்கின்ற வகையிலும் மக்களும் தெரிந்து கொள்கின்ற வாய்ப்பை ஏற்படுத்தித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா? இன்றைக்கு கிரிக்கெட் விளையாட்டை நேரிடையாக ஒளிபரப்புகிறார்கள். அது மிக அற்புதமாக மக்கள் மத்தியிலே வரவேற்கப்படுகிறது. முக்கியமாக மக்களுக்காக பணியாற்றுகின்ற சட்டமன்ற நடவடிக்கைகளை நேரிடையாக ஒளிபரப்ப நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றி சம்பந்தப்பட்ட தொலைக்காட்சித் துறை அமைச்சரிடம் கருத்து தெரிவிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

பாலாடைக்கட்டி தொழிற்சாலை.

106—(*வினா எண் 5284)—திரு. ரா. தாமரைக்கனி : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாலாடைக் கட்டி தொழிற்சாலை நிறுவ அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு செலவில் எப்போது நிறுவப்படும்?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (அ) ஆம்.

(ஆ) அண்ணா மாவட்டத்தில் கொடைக்கானலில் 1979-ல் ரூ. 15 இலட்சம் மதிப்பீட்டிலும், நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் 1985-ல் ரூ. 61 இலட்சத்திலும் பாலாடைக் கட்டி தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது மாதிரி பாலாடைக் கட்டி தயாரிக்கும் தொழிற்சாலையை வேறு இடங்களிலும் நிறுவ அரசு முன் வருமா ? இங்கே பால் தட்டுப்பாடு இருக்கிறது. அதனால் வெளி நாடுகளிலிருந்து பால் வாங்க நடவடிக்கையோ அல்லது மாடு வாங்க நடவடிக்கையோ அரசு எடுத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பாலாடைக் கட்டிக்கு நல்ல கிராக்கி இருக்கிறது. ஆனால் பால் போதிய அளவுக்கு, பாலாடைக் கட்டி தயாரிக்கும் அளவுக்குக் கிடைக்காததால் மேற்கொண்டு பாலாடைக் கட்டி உற்பத்தி செய்யும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் தற்போது இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மகாத்மா காந்தி அவர்கள் வெள்ளாட்டுப் பாலை விரும்பிச் சாப்பிட்டவர்கள். அது உடம்புக்கு நல்லது, குழந்தைகளுக்கு நல்லது. ஆகவே ஆட்டுப்பால் சாப்பிடவேண்டுமென்று மனிதர்களை வற்புறுத்துவதோடு, பாலாடைக் கட்டி தயாரிக்கும் தொழிற்சாலைகளில் ஆட்டுப் பாலிலிருந்து பாலாடைக் கட்டி தயாரிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆட்டுப் பால் போதிய அளவுக்குக் கிடைக்காது. அது போதிய அளவுக்குக் கிடைத்தால்தான் அதிலிருந்து பாலாடைக் கட்டி உற்பத்தி செய்யும் யோசனையை ஏற்க முடியும்.

கீரிப்பாறை தொழில் கூடத்தில் ரப்பர் விற்பனை.

107—(*வினா எண் 7601)—திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு ரப்பர் கழகத்தில் கீரிப்பாறை தொழில் கூடத்திலிருந்து 18–10–1985 அன்று ரப்பர் எடை போட்டு விற்பனை செய்ததில் நடந்த முறைகேடு சம்பந்தமாக அரசு என்ன நடதவடிக்கை மேற்கொண்டுள்ளது ?